பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 03 2025 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- 2025-26-ஆம் நிதி ஆண்டிற்கான நிதி மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.
- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிலுவைத் தொகையை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் 17 ஆயிரத்து 453 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.
- மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

2025-26-ஆம் நிதி ஆண்டிற்கான நிதி மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

மக்களவையில் இம்மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வரி செலுத்துவோருக்கு மதிப்பளிக்கும் வகையில் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்கும் என்று அவர் கூறினார்.

தனி நபர் ஆண்டு வருமானம் 12 லட்சம் ரூபாய் வரை வருமான வரியிலிருந்து தள்ளுபடி வழங்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்,.

புதிய வருமான வரி மசோதா நாடாளுமன்றத்தின் அடுத்த மழைக்காலக் கூட்டத்தொடரில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்கை எட்டும் நோக்கிலான திட்டங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

உற்பத்தி ஆலைகள் ஏற்றுமதி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும். ஏற்றுமதியில் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் உதவுடும் வகையில் மூலப்பொருட்களுக்கான வரி விகிதங்கள் குறைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மின்சார வாகனங்களுக்கான பேட்டரி  உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 35 பொருட்களுக்.கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவை தவிர செல்போன் பேட்டரிகளுக்கான உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் 28 வகையான பொருட்களுக்கும் இந்த வரி விலக்கு பொருந்தும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிலுவைத் தொகையை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், நிதியை விடுவிப்பதில் மாநிலங்களுக்கு இடையே எவ்வித பாகுபாடும் காட்டப்படுவதில்லை என்றார்.

தமிழ்நாடு மற்றும் மேற்குவங்க அரசுகள் இத்திட்டத்தை செயல்படுத்தியதற்கான அறிக்கையை சமர்ப்பித்தபின் நிதி விடுவிக்கப்படும் என்று திரு சிவராஜ் சிங் தெரிவித்தார்.

அமைச்சரின் பதில் தங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்று கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை நடவடிக்கைகள் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

[]<<<>>>[]

நாட்டின் பால் உற்பத்தியை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 300 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய கால்நடை மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர், 2014-ஆம் ஆண்டு  தேசிய பசு இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து பால் உற்பத்தி 63 புள்ளி ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

இதன்மூலம் அடுத்த மூன்று ஆண்டுகளில் பால் உற்பத்தி மேலும் 15 சதவீதம் அதிகரிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாடு முழுவதும் பத்து கோடிக்கும் அதிகமானோர் இதில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்களில் 75 சதவீதம் பேர் பெண்கள் என்றும் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் காலம் மழைக்காலக் கூட்டத்தொடரின் கடைசி வாரத்தின் முதல்நாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மக்களவையில் கூட்டுக் குழுவின் தலைவர் திரு பி பி சௌத்திரி தாக்கல் செய்த தீர்மானத்திற்கு அவை ஒப்புதல் அளித்தது.,

[]<<<>>>[]

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் 45-வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

இளங்கலை, முதுகலை மற்றும் பட்டமேற்படிப்பு முனைவர் பிரிவு என மொத்தம் நான்காயிரத்து 434 மாணவ மாணவிகள் பட்டம் பெற்றனர்.

[]<<<>>>[]

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் 133 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து புதிய தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சேலம் மாவட்டம் அரியகவுண்டம்பட்டியில் அடுக்குமாடி வெள்ளிக்கொலுசு உற்பத்தி வளாகம், கோவை மாவட்டம் குறிஞ்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி ஆகியவற்றையும் அவர் தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரம், கடலூர், திருவாரூர், சேலம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ஐந்து தொழிற்பேட்டைகளையும் திரு மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் 17 ஆயிரத்து 453 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நடைபெற்று வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அமைச்சர், இரண்டாவது கட்ட ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம், கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் 16 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் 16 ஆயிரத்து 875 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

செனன்னையின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, 15 புதிய குடிநீர் திட்டப் பணிகள் இரண்டாயித்து 89 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நகர்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு தூய்மையான சுற்றுச்சூழலை உருவாக்கும் வகையில் நதிக்கரைகளை சீரமைக்கும் திட்டம் தனியார் பங்களிப்புடன் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நகர்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரத்யேக குறைதீர்க்கும் மையம் உருவாக்கப்படும் என்றும் திரு கே என் நேரு தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழக காவல் துறையில் பதவி உயர்வு மூலம் துணை காவல் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்க சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதபதி திரு சி வி கார்த்திகேயன், தகுதி அடிப்படையில் பணி மூப்புப் பட்டியல் தயாரிக்கப்படாமல் தற்காலிக அடிப்படையில் கூடுதல் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு தடை விதித்து உத்தரவிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலை மற்றும் அதனையொட்டி உள்ள மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவிதுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மாநிலத்தின் பல பகுதிகளில் 27 முதல் 29-ஆம் தேதி வரை வெப்ப நிலை படிப்படியாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ----32 செகண்ட்*

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 80 சதவீத மானிய விலையில் வேளாண் கருவிகளை ஆட்சியர் திரு தினேஷ்குமார் விவசாயிகளுக்கு இன்று வழங்கினார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் அரசு துறைகளின் சார்பில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் உயிரி அடிப்படையிலான பூச்சி மற்றும் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாக துருவம் விரிவாக்க மையத்தில் வளமிகு வளர்ச்சித திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பப்பாளி கன்றுகளை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் வழங்கினார்.

[]<<<>>>[]

108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான கும்பகோணம் அருகே திருநாகேஸ்வரத்தில் உள்ள ஒப்பிலியப்பன் கோவில் பங்குனி பெருவிழா தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

[]<<<>>>[]

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் நிறும வரி செலுத்துவதற்காகவும், தொழில் உரிமங்களை புதுப்பிப்பதற்காகவும் இம்மாதம் 29, 30, 31 ஆகிய விடுமுறை நாட்களில் வருவாய்த்துறை இயங்கும் என்று மாநகராட்சி தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தாம்ப்ரே – சீனாவின் wushuang zheng இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துருக்கியில் இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-2 என்ற நேர் செட்களில் பெல்ஜியத்தின் Magali kempen - இங்கிலாந்தின் Maia lumsden இணையை வென்றது.

[]<<<>>>[]

சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் சகாஜா யாமலப்பள்ளி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

[]<<<>>>[]

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியின் பதக்கப்பட்டியலில் தமிழகம் 25 தங்கம், 17 வெள்ளி, 25 வெண்கலம் என மொத்தம் 67 பதக்கங்களுடன்இரண்டாவது இடத்தில் உள்ளது.

*End of News*